*ஆய்வுக்கட்டுரை இல: 75*

# இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைபுரிந்துகொள்வதில் தமிழிலக்கியஅறபுச் சொல் அகராதியின் முக்கியத்துவம்: ஓர் ஆய்வு

**ராஹிலா ஷியாத்**

*மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*
*rahilaz@seu.ac.lk*

***ஆய்வுச்சுருக்கம்***

*தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் பௌத்தம்,சமணம்,வைணவம், இஸ்லாம்,கிறிஸ்தவம் எனப் பல் மதங்களின் செல்வாக்குக் காணப்படுகின்றது. தமிழில் அம்மதங்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்கள் பலதோற்றம் பெற்றுள்ளன. இஸ்லாமியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள தமிழ் இலக்கியங்களில், அறபுச் சொற்கள் மாத்திரமன்றி அறபுமொழியோடு நீண்ட காலத் தொடர்பு கொண்டுள்ள பார்சி மொழிச் சொற்களும் சிறுபான்மையாகக் கலந்துள்ளன. இஸ்லாமியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதால் இலக்கியங்களில் இஸ்லாமியப் பண்பாட்டையும் கருத்துக்களையும் சிறந்த முறையில் விளக்குவதற்கு அறபு, பார்சிமொழிச் சொற்கள் மிகப் பொருத்தமானதாக இருந்தமையினால் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் அவற்றைக் கையாண்டுள்ளனர். எனினும், அறபு, பார்சிமொழிச் சொற்களை அறியாதோர் இத்தகைய இலக்கியங்களைப் படித்துப் பயனடைய முடியாத நிலை காணப்படுகின்றது. இந்தச் சிக்கலை தமிழ் இலக்கியஅறபுச் சொல் அகராதி எவ்வாறு தீர்க்கின்றது என்பது பற்றியதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப் புரிந்துகொள்வதில் தமிழ் இலக்கியஅறபுச் சொல் அகராதியின் முக்கியத்துவத்தை மதிப்பிடல் ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை கற்பதில் உள்ள இடர்பாடுகளை தமிழ் இலக்கிய அறபுச் சொல் அகராதி எந்தளவுக்கு தீர்க்கின்றது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் பொதிந்துள்ள கருத்துக்களை முழுமையாக விளங்கிக்கொள்ள தமிழ் இலக்கிய அறபுச்சொல் அகராதி பெரிதும் உதவுகின்றது என்ற கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொழியியல், விமர்சனஆய்வு அணுகுமுறைகள் பின்பற்றப்படடுள்ளன. முதல் நிலைத் தரவுகளாக இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களும் தமிழ் இலக்கிய அறபுச்சொல் அகராதியும் இரண்டாம் நிலைத் தரவுகளாக அவைத் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்களும் கட்டுரைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***பிரதானசொற்கள்:****இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், அறபுசொற்கள், பார்சிச் சொற்கள்*

## அறிமுகம்

மொழிவளர்ச்சியின் காரணமாகவும் பிறமொழித் தாக்கத்தின் விளைவாகவும் ஏற்பட்டசொற் பெருக்கத்தினாலும் பொருள் மாற்றத்தினாலும் எல்லாச் சொற்களின் பொருளையும் சுட்டவேண்டிய சூழல் பிற்காலத்தில் உருவானது. மேலும், ஐரோப்பியரின் வருகையைஅடுத்து,தமிழ்மொழியில் ஏராளமான அறிவியல் கலைச் சொற்கள் படைக்கப்பட்டன. இது இடைக்காலத்து எழுந்த ஒரு மொழிமாற்றமாகும். இதனால் 'Lexicography'என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் அகராதியியல் துறையானது தமிழில் வளர்ச்சியடையத்

தொடங்கியது. இது சொற்களை அகராதி வடிவில் எழுதுதல் எனும் பொருளைக் கொண்டுள்ளது.

ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியானது Lexicography என்பதற்கு ‘அகராதி அல்லது பேரகராதித் தொகுத்தல் அல்லது எழுதுதல், அகராதித் தொகுக்கும் கலை அல்லது பயிற்சி’[1]எனப் பொருள் விளக்கம் தருகின்றது. அதாவது ஒரு மொழியில் வழங்கப்படும் சொற்களை ஒரு சில ஒழுங்கு முறைகளின்கீழ் தொகுத்து அவற்றை அகரவரிசைப்படித் தொகுத்துசொல் - பொருள் விளக்கம் எனும் வகையில் வழங்கப்படும் நூற்கள் அகராதிகள் எனப்படுகின்றன. இவ்வகராதிகளை, அவற்றுள் இடம்பெறும் சொல்லின் தன்மை, வகை, மொழிகளின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் பலவகைகளாகப் காணப்படுகின்றன. அந்த வகையில் மொழிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒருமொழி, இருமொழி, பன்மொழி அகராதிகள் எனப் பாகுபடுத்தப்படுகின்றன.

‘‘தமிழில் தோன்றிய பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் தொடக்கம் அதன் பின்பு தோன்றிய மரபிலக்கண நூல்கள் அனைத்தும் மொழியின் இலக்கண அமைப்பை விளக்குவதோடு சொற்பொருளை விளக்கும் அகராதிக் கூறுகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளன.தொல்காப்பியத்தில் இடையியல், மரபியல்,உரியியல் ஆகிய மூன்று பகுதிகளில் சொற் பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன’’[2] என பெ. மாதையன் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு மரபிலக்கண உரியியல் மரபானது காலப்போக்கில் நிகண்டு மரபு தோன்றக் காரணமாக அமைந்தது. அதாவது, இடைக்காலத்துப் புலவர்களால் தமிழும் வடமொழியும் கலந்த நடையில் இலக்கியங்கள் புனையப்பட்டதால் மொழி அமைப்பில் மாற்றம் ஏற்பட்டது. மாறி வரும் மொழி அமைப்பையும் சொற்தொகுதியையும் புரிந்து கொள்ள அதற்கான நூல்களின் தேவை உணரப்பட்டது. இதை நிறைவேற்றுவதற்காக நிகண்டுகள் எனும்சொற்களுக்கு பொருள் கூறும் நூல்கள் பா வடிவில் தோற்றம் பெற்றன. இவை பெரும்பாலும் ஒரு பொருள் பல் பெயர்த் தொகுதி,ஒரு சொல் பல் பொருள் பெயர்த்தொகுதி, பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி என்ற அடிப்படையில் அமைந்துள்ளன. 9 ஆம் நூற்றாண்டில் திவாகரம் நிகண்டின் தொடக்கம் முதல், அகராதிகளின் தோற்றம் வரைக்கும் பல நிகண்டுகள் தமிழில் இயற்றப்பட்டுள்ளன.

‘‘ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே யாப்புமுறைச் சொற்பொருள் விளக்கமான நிகண்டு முறையை விடுத்து உரைநடையில் அகராதிகள் இயற்றப்பட்டன. நிகண்டுகள் இருக்கும்போது, உரைநடையில் அகராதிகள் தோன்றக் காரணம் அவையெல்லாம் செய்யுளில் அமைந்திருத்தலாம். செய்யுளின் பொருளை விளங்கிக் கொள்வது கடினம் என்பது சொல்ல வேண்டா. விளக்கப் பகுதிகளோடு பாட்டின் அமைப்பிற்காக அடைமொழிகள் முதலிய இடைப்பிறவரல்களும் இணைவதால் அவற்றைப் பிரித்து எது சொல், எது பொருள் என்று அறிவதும் எளிதன்று. மேலும்,நிகண்டுகளில் தெய்வப் பெயர், மக்கட் பெயர், இடப் பெயர் முதலிய பல தொகுதிகளில் சொற்கள் பிரிந்து அமைந்து கிடக்கும். ஒரு சொல்லுக்கரிய பொருள் தேட வேண்டுமானால், அச் சொல் எந்தத் தொகுதியைச் சார்ந்தது என்று முதலில்

[1]Murugan, Dr.V.,(Editor) Oxford English – Tamil Dictionary, Oxford University Press, New Delhi .2012. P827.

[2]மாதையன், பெ., அகராதியியல், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1977,ப.9.

தெரிய வேண்டும். அதன் பின்னர் அந்தத் தொகுதி முழுமையும் வாசித்தாலல்லாமல் விரும்பிய சொற் பொருளை கண்டு பிடிக்க இயலாது"[3]

மேலும் சமயப்பணியின் பொருட்டு தமிழகம் வந்த ஐரோப்பியப் பாதிரிமார் தமிழ் மொழியைக் கற்க முற்பட்டபோது, தமிழைக் கற்பதற்கும் மக்களோடு மக்களாய்க் கலந்து உரையாடுவதற்கும் அவர்களுக்கு அகராதி தேவைப்பட்டது. நிகண்டுகளின் பாக்களைப் படிப்பதும் மனனம் செய்வதும் கஷ்டமாக இருந்தது. அத்தோடுநிகண்டுகள் அன்றாட உரையாடலுக்கும் உதவியாகஅமையாதுஎன்றுஉணர்ந்தஅவர்கள்,அகராதிகளைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.இதன் முதற் கட்டமாக கி.பி. 1732இல் வீரமாமுனிவரால் சதுரகராதி தோற்றுவிக்கப்பட்டது. இது பெயர், பொருள், தொகை, தொடை என நான்கு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதோடு நிகண்டுகளில் இடம் பெற்றுள்ள பாக்களை உரைநடையில் தந்து தமிழில் தோன்றிய முதல் அகராதியாக பெருமையுடன் திகழ்கின்றது.

தமிழ் மொழியின் பல்வேறு பரிணாம வளர்ச்சிக் கட்டங்களின் விளைவுகளின் ஒரு பகுதியாக அகராதிகளின் வளர்ச்சிக் கட்டங்களும் காணப்படுகின்றன. அந்தவகையில் ஒரு மொழி அகராதிகளின் வரலாற்றைப் பொறுத்தவரையிலும் பல வளர்ச்சிப் போக்குகளைக் உள்ளடக்கி நிகண்டு மரபுவழியாக நவீனஅகராதி மரபு வளர்ச்சி அடைந்துள்ளது.சதுரகராதியைத் தொடர்ந்து தமிழில் ஒரு மொழி அகராதிகளின் வளர்ச்சி ஆரம்பமானது. ஈழத்தைப் பொறுத்தவரையில் அகராதிகளின் தோற்றமானது தமிழ் நாட்டில் நிகண்டுகளின் தோற்றத்தோடு ஆரம்பிப்பதை அவதானிக்க முடியும். ஈழத்தில் நிகண்டுகள் தோற்றம் பெறாவிட்டாலும் இவற்றின் பயன்பாடு ஈழத்தில் பெருமளவு பரந்து காணப்பட்டுள்ளது. இங்கு நிகண்டுகளின் பதிப்புமுயற்சிகள் பல இடம் பெற்றுள்ளன.

ஐரோப்பியரின் முயற்சியினால் தமிழுக்குப் பல்வேறு வகையான அகராதிகள் கிடைத்தன. அவ்வாறே ஈழத்தவரும் ஐரோப்பியரோடு சேர்ந்தும் தனிப்பட்ட முறையிலும் பல்வேறு வகையான அகராதி முயற்சிகளில் ஈடுபட்டனர். இவ்வகையில் ஈழத்தறிஞர் சைமன் காசிச்செட்டி அவர்களின் **சமஸ்கிருத – தமிழ் அகராதி** (1807- 1867), நீர்வேலி சங்கரபண்டிதர் அவர்களின் **தாது மாலை** (1821-1891),சந்திர சேகரப்பண்டிதர் அவர்களின் **யாழ்ப்பாணத்தமிழ் அகராதி அல்லது மானிப்பாய் அகராதி (1842),**மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களின் **அபிதானகோசம்** (1902), புலாலியூர் நா. கதிரவேற்பிள்ளை அவர்களின் **தமிழ்ப்பேரகராதி** (1899), கு.வை. கதிரவேற்பிள்ளை அவர்களின் **தமிழ்சொல் அகராதி** அல்லது **தமிழ்ச் சங்க அகராதி (1904),**ஞானப்பிரகாச அடிகளாரின் **சொற்பிறப்பு, ஒப்பியல் அகராதி** (1939-1946), சுன்னாகம் அ. குமாரசுவாமி புலவர் அவர்களின் **இலக்கியச் சொல்லகராதி** (1915) டாக்டர். எம். எம். உவைஸ் அவர்களின் **தமிழிலக்கிய அறபுச் சொல் அகராதி** (1983) என்பனஈழத்தவரின் அகராதி முயற்சிகளில் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. மேலும் சில அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், பழமொழிகள் என்பனவும் தோற்றம் பெற்றுள்ளன.

ஈழத்தில் தமிழில் தோன்றிய அகராதிகள்பெருபான்மையாகத் தமிழ் சொற்களுக்கும்,சிறுபான்மையாக வட சொற்களுக்கும் பொருள் கூறுவனவாக அமைய எம். எம். உவைஸ் அவர்களின் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய அகராதியானது விசேடமாக இஸ்லாமியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறபு, பாரசீகச் சொற்களுக்குப் பொருள் கூறுவனவாக அமைந்துள்ளன.தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் பௌத்தம், சமணம், வைணவம், இஸ்லாம் எனப் பல் மதங்களின் செல்வாக்குக் காணப்படுகின்றன. அம்மதங்கள் தோன்றிய மொழிகளின் செல்வாக்குக்கும் அது ஆட்பட்டுள்ளது. இந்த வகையில் பாளி, பாகதம், சங்கேதம், அறபு

[3] சுண்முகம் பிள்ளை, மு. "தமிழில் அகராதிக் கலையின் வளர்ச்சி வரலாறு", தமிழாய்வு - 12

ஆகிய மொழிகளின் செல்வாக்கை அந்த மதங்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட இலக்கியங்கள் பிரதிபலித்துள்ளன.

இஸ்லாமியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள தமிழ் இலக்கியங்களில் பொரும்பான்மையாக அறபுச் சொற்களின் செல்வாக்கு மாத்திரமன்றி அறபு மொழியோடு நீண்டகாலத் தொடர்பு கொண்டுள்ள அறபு மொழியின் கிளை மொழியான பார்சி மொழிச் சொற்கள் சிறுபான்மையாக கலந்துள்ளன. காரணம் இஸ்லாமியக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள இலக்கியங்களில் இஸ்லாமியக் கலை சொற்களையும் கருத்துக்களையும் சிறந்த முறையில் விளக்குவதற்கு அறபு, பார்சி மொழிச் சொற்கள் மிகப் பொருத்தமானதாக இருந்ததனால் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் அதனை கையாண்டுள்ளனர்.

அதனால்''இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறபு, பார்சி மொழிச் சொற்கள் காரணமாக இம் மொழிச் சொற்களை அறியாதோர் அவ்விலக்கியங்களை படித்துப் புரிந்து கொள்வதில் பெரிதும் இடர்ப்படுவர். இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் எல்லோராலும் நயக்கத்தக்கனவாய் அமையாமைக்குரிய ஒரு காரணம், அத்தகைய நூல்களில் மலிந்துள்ள அறபு, பார்சி மொழிச் சொற்களேயாம். மேலும், முஸ்லிம் அல்லாதோர் மாத்திரம் அன்றி முஸ்லிம் மக்கள்கூட இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப் படித்துப் பயன் பெற முடியாமல் போனமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்''[4] என இவ்வகராதியின் முன்னுரையில் குறிப்பிடுவதிலிருந்து இவ்வகராதி இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை தெளிவாக சரிவரப் புரிந்து கொள்ள ஒரு கருவி நூலாக அமைகின்றது எனக் கருத முடியும்.

திசைச் சொற்கள் இல்லாத மொழி எதுவுமே இல்லை என்று கூறுமளவுக்கு பெரும்பாலான எல்லா மொழிகளிலும் திசைச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. அதாவது தற்காலத்தில் எந்த மொழியும் தனிமையாக இயங்க முடியாது. உலகத்தின் தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் பெருமளவு எல்லா மொழிகளையும் பாதித்துள்ளன. இவ்வாறான தொடர்புகள் ஏற்படுவதனால் மொழிக்கலப்பானது வெகுவாகத் தீவிரமடைவதோடு தவிர்க்க முடியாததாகியும் விடுகிறது. இவ்வாறு தமிழ் மொழியும் பல்வேறு மொழிகளின் கலப்புக்குட்பட்டு வந்துள்ளன. அறபு நாட்டு முஸ்லிம்களின் பண்டு தொட்டு இருந்துவரும் தொடர்பு காரணமாக அறபு, பாரசீக மொழிகளின் கலப்பும் தவிர்க்க முடியாதவை. இருந்தாலும், தமிழ்ப் பொது வழக்கிலே இடம் பெற்றுள்ள அறபு, பார்சிச் சொற்களிலிருந்து இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் கலந்துள்ள அறபு, பார்சிச் சொற்கள் வேறுபட்டவையாகும். அதாவது அவை அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களாகவும், அல்குர்ஆன் சொற்கள், சொற்றொடர்களாகவும் இஸ்லாமிய மார்க்கக் கடமைகளோடு சம்பந்தப்பட்ட சொற்கள், சமூகக் கலாசாரத்தோடு தொடர்புடைய சொற்கள், இடப்பெயர்கள், இயற்பெயர்கள்என்பவற்றோடு தொடர்புடைய சொற்களாகவும் அமைந்துள்ளன.

மேலும்,இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் கலந்துள்ள அறபு, சொற்கள் வெவ்வேறு பொருள் தரக்கூடியவாறு அமைந்து இருப்பதால் அவற்றை புரிந்து கொள்ளுவதில் சிரமம் ஏற்பட வாய்ப்புண்டு. எடுத்துக்காட்டாக,இஸ்லாம் மார்க்கத்தைக் குறிக்கும் 'தீன்' என்ற அறபுச் சொல் பெரும்பாலும் எல்லா இலக்கியங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மொழியில் 'தீன்' என்றால் உணவு என்று பொருள்படும். சில சமயங்களில் 'தீன்பயிா'எனச் சொற்றொடராக அமையும்போது,'உணவுக்கான பயிர்' என்ற அர்த்தம் கொள்ள இடமுண்டு.(''தீன் எனும் பயிர்க்கோர் செழுமழை யெனலாய்''–

[4]உவைஸ், எம். எம். டாக்டர்., தமிழிலக்கிய அறபுச் சொல் அகராதி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை, 1983, ப. 7

சீறாப்புராணம்: 5: 29) அதேபோல் இஸ்லாமியக் கோட்பாடுகளில் மிக முக்கியமான சொல்லாக விளங்கும் 'ஈமான்' என்ற சொல்லை தனிச் சொல்லாகக் கொள்ளாமல் சொற்றொடராக எடுத்துப் பொருள் கொண்டால் வேறு ஒரு அர்த்தம் கொள்ள வேண்டி வரும்.("புதிய மொழி யுரைத்து ஈமான் கொள்வித்து"– சிறாப்புராணம்: 30 : 11) இஸ்லாத்தின் மூல மந்திரமான 'கலிமா' என்ற சொல்லையும் முஹம்மது நபியவர்களின் பேரில் கூறப்படும் வாழ்த்தைக் குறிக்கும் சலவாத்து என்ற சொல்லையும் தனிச் சொற்களாகக் கொள்ளாமல் சொற்றொடர்களாகக் கொண்டு பாாத்தால் நேர்மாற்றமான பொருள்கள் கொள்ள வேண்டி வரும்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள சில அறபுச் சொற்களுக்கு தமிழ் இலக்கண விகுதிகள் சேர்க்கப்பட்டு கையாளப்பட்டுள்ளன. இதனாலும் இவ்விலக்கியங்களை விளங்கிக் கொள்வதில் பல சிக்கல்கள் எழுகின்றன. அதாவது,தீன் என்ற சொல்லுடன் உயர்திணைப் பலர்பால் விகுதிகள் ஓர், அர், என்பன சேர்ந்து 'தீனோர்','தீனவர்','தீனர்'என வந்துள்ளன. அதேபோல், முஸ்லிம் அல்லாத தன்மையைக் குறிக்கும் 'குப்ர்' என்னும் சொல் 'ஓர்' ,'அர்'ஆகிய விகுதிகளைப் பெற்று முறையே 'குபிரோர்','குபிரர்' என வந்துள்ளது.

மேலும், அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் உண்மையானவன் என்ற பொருளைக் கொண்டுள்ள 'ஹக்' அல்லது 'ஹக்கு' என்ற சொல் உயர்திணை ஆண்பால் விகுதியான 'அன்' விகுதியைச் சேர்த்து 'ஹக்கன்' எனவும் வழங்கப்பட்டுள்ளது. கிரந்த எழுத்து பயன்படுத்தப்படாத சில இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் 'கக்கன்','அக்கன்' என்றும் இடம் பெற்றுள்ளது. சில இலக்கிய வடிவங்களில் கையாளப்பட்டுள்ள அறபுச் சொற்களோடு தமிழ் பன்மை விகுதியான 'கள்' விகுதி சேர்க்கப்பட்டுள்ளது. அல்குர்ஆன் வசனத்தை குறிப்பிடும் 'ஆயத்' என்ற சொல் ஆயத்துக்கள் என்றும் மக்கா, மதீனா ஆகிய இடங்களில் வாழ்பவர்களை முறையே 'மக்கி','மதனி' என அறபியில் குறிக்கும் சொற்கள் 'மக்கிகள்,'மதனிகள்' என வழங்கப்பட்டுள்ளன. உயர்திணைப் பன்மை விகுதியான 'மார்' என்ற விகுதியும் சில இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் 'நபிமார்','வலிமார்','குறைஷிமார்','அசுகாபிமார்என இடம் பெற்றுள்ளன.

தமிழ் இலக்கண மரபுப்படி மகரவீற்றுச் சொற்களை அடுத்து 'அத்து' சாரியை வரும் என்ற விதிப்படி சில இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள மகரவீற்று அறபுச் சொற்கள் இதே விதிக்கிணங்கப் புணர்த்தப்பட்டுள்ளன. இறுதி என்ற பொருளில் வரும் 'கியாமம்','புனிதம்' என்ற பொருளில் வரும் 'கறம்','எழுதுகோல்' என்ற பொருளைக் கொண்ட 'கலம்' போன்ற இன்னோரன்ன மகரவீற்றுச் சொற்கள் அத்துச்சாரியை பெற்றுள்ளன.தமிழ் இலக்கண மரபுப்படி வல்லெழுத்துக்களுள் ற, ர, ல ஆகிய எழுத்துக்கள் மொழி முதலில் வராது. இவ்வெழுத்துக்களை மொழி முதலாகக் கொண்ட அறபுச் சொற்களுக்கு இகரம் அல்லது உகரத்தை அப்புலவர்கள் சேர்த்துள்ளனர். அதாவது, ஏழாவது இஸ்லாமிய மாதமாக விளங்கும் கண்ணியமிக்க மாதம் என்ற பொருள் கொண்ட 'றஜப்' என்ற சொல் 'இறஜப்' என்றும் தூதரைக் குறிக்கும் றசூல் என்பது 'இறசூல்' என்றும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இரு வேறு பொருள் கொள்ளக்கூடிய சொற்கள் இடம்பெறுதல், தமிழ் இலக்கண மரபுக்கு அமைய அறபுச் சொற்களோடு விகுதிகள், சாரியைகள் சேருதல், கிரந்த எழுத்துக்கள் நீக்கப்பட்டுள்ள அறபிச் சொற்கள் வழங்கப்படுதல் போன்ற சந்தர்ப்பங்களில் அவற்றைதமிழ் இலக்கிய அறபுச் சொல் அகராதி இன்றிச் சரிவரப் புரிந்து கொள்ள முடியாது. இந்த அகராதியில்இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள தனித்த அறபுச் சொற்களும், அறபுச் சொற்களோடு தமிழ் வடிவம் இணைந்த சொற்களும் , சொற்றொடர்களும்

தமிழ் எழுத்துக்களின் அகர வரிசைப்படி அமைக்கப்பட்டுள்ளன. கிரந்த எழுத்தில் தொடங்கும் அறபுச் சொற்களின் வரிசை இவ்வகராதியின் இறுதியில் இடம் பெற்றுள்ளன. இதில் ஓர் அறபுச் சொல் அல்லது அறபுச் சொற்றொடரின் விளக்கம் பின்வரும் வரிசைப்படி அமைந்துள்ளது.

1. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறபுச் சொல் அல்லது தொடர்.
2. அந்தந்த சொல் அல்லது தொடர்களுக்குரிய ஒலியனியல் குறியீடுகள் (Phonemic transcription)
3. இலக்கண விளக்கம்.
4. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறபுச் சொற்களின் அறபு மூலம் ஒலியனியல் குறியீட்டில் இடம் பெறல்.
5. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறபுச் சொற்கள் அல்லது அறபுத் தொடர்களின் நேரடியான தமிழ்ப் பொருள்
6. இஸ்லாமிய அடிப்படையில் தேவையான விளக்கங்கள்.
7. அறபுச் சொற்கள் அல்லது அறபுத் தொடர்கள் இடம்பெற்றுள்ள இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களிலிருந்து ஒரு எடுத்துக்காட்டு – நூலின் பெயர், படலம், பாடல் எண்ணுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

   மேலும் இவ்வகராதியில் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் என சுமார் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களிலிருந்து அறபுச் சொற்கள், சொற்றொடர்கள் இடம் பெற்றுள்ளன. இது முழுமையான அகராதியாக அமையாவிட்டாலும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தை ஆய்வு செய்வோருக்கு பெரிதும் பயன்படக்கூடியதாக அமையும்பேராசிரியர் உவைஸ் அவர்களின் இவ்வகராதி முயற்சியானது வியக்கத்தக்கதும் பாராட்டத்தக்க பயனளிக்கக்கூடியதும் அர்ப்பணிப்பு மிக்க ஒன்றாகவும் அமைந்துள்ளது.

அகராதித் தொகுத்தல் என்பது ஒரு கடினமான முயற்சி. “கொடிய குற்றவாளிகளை தூக்கிலிட்டோ அல்லது கடுமையான பணிகளைச் செய்யச் சொல்லியோ தண்டிக்க வேண்டாம். மாறாக அவர்களை அகராதிகளைத் தொகுக்கும்படிபணித்தால் போதும். ஏனென்றால் எல்லாத் துன்பங்களும் இப்பணியில் அடங்கியுள்ளன”[5]என அகராதிப் பணியின் சிரமம் குறித்து இலத்தீன் அறிஞர் கேல்ஜர் கூறுவதாக முனைவர் எச் சித்தார்த்தன் ‘சொல்லும் பொருளும்’ என்ற நூலில் கூறியிருப்பது கவனத்திற்குரியது. வாழ்நாளில் பெரும்பகுதியை அர்ப்பணித்து பேராசிரியர் உவைஸ் அவர்கள் தமிழிலக்கிய அறபுச் சொல் அகராதியை எமக்கு அளித்துள்ளமை அவர்களுடைய ஆழ்ந்த அறிவையும் அயரா முயற்சியையும் புலப்படுத்தி நிற்கின்றது.

[5]சித்திரபுத்தரன், எச்., முனைவர், சொல்லும் பொருளும், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர்,2004 ப. 82